International Forum for information Technology in Tamil (INFITT)
& University of Pennsylvania (UPENN)
jointly conduct

10வது தமிழ் இணைய மாநாடு 2011
10th TAMIL INTERNET CONFERENCE
ஜூன் 17 - 19 June 17 - 19

# FOR IMMEDIATE PRESS RELEASE

INFITT Executive committee is announcing their annual Tamil Internet Conference, TI2011, 10th in the series to be held at USA from June 17 to 19th at UPENN.

Highlights TI 2011

- First of its kind in US East Coast
- For the very first time in USA a Tamil Internet Exhibition is also being planned and is being organized by KTS (http://www.kanithamizh.in/)
- Research and computing papers on Tamil Computing.
- An exclusive session on the computing needs of Classical Tamil
- Exclusive program to encourage children to use Tamil in computers.
- Exclusive Training programs for Tamil website development using open software using mysql/php for interested professionals
- Exclusive sessions for Tamil Unicode font creation, by Professional Unicode font creators
- And much more… are being considered.

More details are enclosed

Sd. S. Maniam
Executive Director, INFITT
http://www.infitt.org

**மாநாட்டில் பங்கு பெற ஆய்வுச் சுருக்கங்கள் அனுப்பவேண்டி அறிவிப்பு**

உத்தம நிறுவனத்தின் செயற்குழு வருகிற 2011 சூன் மாதம் பதினேழாம் தேதி முதல் பத்தொன்பதாம் தேதி வரை உத்தமத்தின் பத்தாவது தமிழ் இணைய மாநாட்டை நடத்திட முடிவு செய்துள்ளது.

அமெரிக்காவில் உள்ள பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தில் இம்மாநாட்டினை நடத்திட இப்பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பணி செய்துவரும் பேராசிரியர் ஹெரால்டு ஷி்ஃப்மேன் அவர்களும் மற்றும் முனைவர் வாசு அரங்கநாதன் அவர்களும் இம்மாநாட்டின் உள்ளூர்க் குழுவுக்குத் தலைமையேற்று நடத்தித்தர இசைந்துள்ளனர். நமது முன்னாள் தலைவர் கு. கல்யாணசுந்தரம்,சுவிட்சர்லாந்து இம்மாநாட்டின் நிகழ்ச்சிகள் குழுவுக்குத் தலைமையேற்கவும் இசைந்துள்ளார். உத்தமத்தின் தலைவர் வா.மு.சே. கவிஅரசன், அமெரிக்கா தமிழ் இணையம் 2011 பன்னாட்டுக்குழுத் தலைவராகச் செயல்படுவார். உத்தமத்தின் செயலர்-இயக்குநர் சு. மணியம்,சிங்கப்பூர் தமிழ் இணையம் 2011 கண்காட்சிக்குழுத் தலைவராகவும், உத்தமத்தின் துணைத்தலைவர் இளந்தமிழன், மலேசியா மாநாட்டு இணையச் செயலகக் குழுவின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இம்மாநாட்டு நிகழ்ச்சிகள் குழு ஆய்வுச் சுருக்கங்கள் மற்றும் கட்டுரைகளைப் பெற்று அவற்றின் சிறந்த கட்டுரைகளை மாநாட்டில் படைத்திடும் வழிவகைகளைச் செய்வதோடு இம்மாநாட்டின் சிறப்புப் பேச்சாளர்கள் மற்றும் சிறப்புச் சொற்பொழிவு ஏற்பாடு செய்தல் போன்ற பணிகளில் ஈடுபடும். இம்மாநாட்டின் மையக் கருத்தாக "கணினியினூடே செம்மொழி" என்னும் தலைப்பில் கணினி வழியாகத் தமிழ் மொழி இலக்கியங்களைச் செவ்வனே ஆய்ந்தறியும் வழிவகைகளைப் பற்றிக் கலந்துரையாட முனைந்துள்ளோம்.

இம்மாநாட்டில் கட்டுரைகளைப் படைக்க விரும்புவோர் கணினி வழித் தமிழ் இலக்கியங்களை ஆய்வு செய்யும் வழிவகைள் குறித்தும் கணினி வழித் தமிழ் ஆய்வுகள் குறித்தும் தங்களின் கட்டுரைச் சுருக்கங்களை மார்ச்சு மாதம் 15ஆம் தேதிக்குள் ti2011@infitt.org என்னும் முகவரியில் மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். வெளிநாட்டுக் கட்டுரையாளர்கள் தங்களின் பணி நிறுவனங்களினின்று இதற்கான நிதியுதவியை விரைவில் பெறவும் அமெரிக்க நாட்டின் கடவுச் சீட்டினை விரைவில் பெறவும் தங்களின் கட்டுரைச் சுருக்கம் எங்களை அடைந்தவுடன் எங்கள் முடிவுகளை உடனுக்குடன் தங்களுக்குத் தெரிவிக்க முயல்வோம்.

**கீழ்க்கண்ட தலைப்புகளில் ஏதாவது ஒன்றில் உங்களது கட்டுரைச் சுருக்கத்தை அனுப்பும்படி வேண்டுகிறோம்.**

- கணினி வழி தமிழ்ச் சங்க இலக்கிய ஆய்வு: தமிழ் இலக்கியத் தரவை அலசி ஆய்தல், தமிழ் இலக்கியங்களுக்கான தேடுபொறிகளை அமைத்தல், தமிழ் இலக்கியங்களின் காலங்களை அறுதியிடல், இலக்கிய ஆசிரியர்களின் நடையை அறிதல் போன்ற கணினி வழி இலக்கிய ஆய்வு குறித்தான கணினி நிரலிகள்.

- தமிழ்க் கணினி நிரல்கள்: சொற்பகுப்பு நிரலிகள், சொற்திருத்திகள், இலக்கணத் திருத்திகள், மின்னகராதிகள் அமைத்தல்.

- திறவூற்று மென்பொருள், தமிழ் குறித்தான நிரலிகள் மற்றும் கணினி செயலாக்கிகள்.

- தமிழைப் பயன்படுத்தும் வகையிலான கையடக்கக் கருவிகள், கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் அவற்றின் தர நிர்ணயப்படுத்தல். இக்கருவிகளில் பயன்படுத்தப்படும் தமிழ்க் கணினி நிரலிகள்.

- இயற்கை மொழிப் பகுப்பாய்வு, இயந்திர மொழிபெயர்ப்பு, தமிழ் எழுத்துரு பகுப்பான்கள், தமிழ்ப் பேச்சு பகுப்பாய்வு நிரல்கள், தேடு பொறிகள், தமிழ்த் திறனாய்வு நிரல்கள், தமிழ்த் தேடுபொறிகள்.

- தமிழ் இணையம்: தமிழ் வலைப்பூக்கள், விக்கிபீடியா நிரலிகள், செய்திப்பரப்பி நிரலிகள், தமிழ்க் கல்வி நுழைவுப்பக்கங்கள், தமிழ் மின்வணிக நிரலிகள்....

- இணையம் மற்றும் கணினி வழி தமிழ்க் கற்றல் மற்றும் கற்பித்தல்
- தமிழ்த் தரவுகள், மின்னகராதிகள், மின்வணிகமுறைகள்.

மேற்கூறிய தலைப்புகளில் ஏதேனும் ஒன்றில் தங்களது கட்டுரையைப் படைக்க விரும்புவோர் மார்ச்சு 15ஆம் தேதிக்குள் கட்டுரைச் சுருக்கத்தை எங்களுக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். உங்களது கட்டுரைகளை ஆங்கிலத்திலோ தமிழிலோ அல்லது தமிழும் ஆங்கிலமும் கலந்தோ நீங்கள் படைக்கலாம். தமிழில் உள்ள கட்டுரைகளைத் தமிழ் ஒருங்குறியில் மட்டும்தான் பெற்றுக்கொள்ள இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். வேறு எழுத்துருக்களில் எழுதினால் தாங்கள் அதை ஏதாவது உரு மாற்றி நிரலி கொண்டு தமிழ் ஒருங்குறிக்கு மாற்றி எங்களுக்கு அனுப்பவேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

மாநாட்டுக் குழு உங்களின் படைப்புகளை மிகக் கவனமாக ஆய்ந்தறிந்து மாநாட்டில் படைக்கும் தரம் கொண்ட கட்டுரைச் சுருக்கங்களைத் தேர்வு செய்யும். தேர்வுசெய்யப்பட்ட கட்டுரைச் சுருக்கங்களின் முழுக்கட்டுரையை நான்கு பக்கங்களுக்கு மிகாமல் எங்களுக்கு உரிய தேதிக்குள் அனுப்பவேண்டும். கட்டுரைகளை மாநாட்டு மலரிலும் குறுவட்டிலும் வெளியிடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தேர்வு செய்யப்பட்ட கட்டுரையாளர்களை ஏப்ரல் 15ஆம் தேதி 2011க்குள் தொடர்பு கொள்வோம். கட்டுரைகளைப் படைத்தவர்கள் நேரில் மாநாட்டுக்கு வருகை தந்து தங்களது கட்டுரைகளைப் படைக்கவேண்டும் என்பது மிகவும் முக்கியம். ஒருவருக்காக வேறு ஒருவர் கட்டுரைகளைப் படைக்க இயலாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் வேறு ஒருவர் படைக்க நேரிட்டால், அவர் அக்கட்டுரையின் பொருளடக்கம் நன்கு அறிந்தவராக இருத்தல் வேண்டும்.

ஒன்று அல்லது இரண்டு பக்கக் கட்டுரைச் சுருக்கத்தை மாநாட்டு அலுவலகத்துக்கு ti2011@infitt.org என்ற மின் முகவரிக்கு அனுப்புவதோடு கட்டுரைச் சுருக்கத்தின் ஒரு நகலை ti2011-cpc@infitt.org என்ற முகவரிக்கும் மார்ச்சு மாதம் 15ஆம் தேதிக்குள் அனுப்பவேண்டும்.

மாநாட்டில் பங்கு பெற விரும்பும் உலகத் தமிழ் கணினி ஆர்வலர்கள் மேல் விவரங்களுக்கு, கீழே குறிப்பிட்டுள்ள தங்கள் பகுதி உத்தமத்தின் செய்தித் தொடர்பாளர்களையும் தொடர்பு கொள்ளலாம்.

மலேசியா : இளந்தமிழ், துணைத்தலைவர், உத்தமம் : vice-chair@infitt.org , Elantamil@infitt.org
இந்தியா : ஆண்டோ பீட்டர், செயற்குழு உறுப்பினர், உத்தமம் : antopeter@infitt.org
இலங்கை : மயூரன், செயற்குழு உறுப்பினர் உத்தமம் : mauran@infitt.org
ஐரோப்பா : சிவா பிள்ளை, செயற்குழு உறுப்பினர் உத்தமம் : sivapillai@infitt.org
ஆசுதிரேலியா : முகுந்த், செயற்குழு உறுப்பினர், உத்தமம் : Mugunth@infitt.org
சிங்கை : மணியம், செயலர்- இயக்குநர் உத்தமம், ed@infitt,org, maniam@infitt.org
அமெரிக்கா: கவிஅரசன் வா.மு.சே. தலைவர் உத்தமம், chair@infitt.org, kavi@infitt.org
பிறபகுதிகள் : ed@infitt.org, chair@infitt.org

மாநாடு குறித்து உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருப்பின் மாநாட்டு அலுவலகத்தை ti2011@infitt.org என்ற மின்முகவரியில் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

தமிழ் இணையம் 2011, மாநாட்டு வலைப்பக்கம்:
http://www.infitt.org/ti2011/
http://www.tamilinternetconference.org/

## CALL FOR ABSTRACTS - ANNOUNCEMENT

**International Forum for Information Technology** (INFITT) is pleased to announce that the next Tamil Internet Conference 2011 (10th in the series) will be held at the University of Pennsylvania, Philadelphia, USA during June 17-19, 2011.

Prof. Harold F. Schiffman, Dr. Vasu Renganathan and Dr. K. Kalyanasundaram have kindly agreed to assist in the organization of the conference as Chairs of the Local Organizing Committee (LOC) and Conference Program Committee (CPC). INFITT Chair Va.Mu.Se. Kaviarasan will serve as Chair of International Organizing Committee (IOC). INIFTT ED S. Maniam is appointed as Chair of TI 2011 exhibition committee and INFITT Vice-Chair ElanTamil is appointed as Chair of TI 2011 Conference Secretariat committee.

The committee (CPC) will deal with paper submission and scheduling of the conference content (invited lectures and submitted papers). The theme of this conference has been proposed as "Classical Tamil in the Digital Medium" aiming to the development of research on computational literary research for Tamil.

We take this opportunity to invite technical papers for presentation at TI2011 on all topics relating Tamil with Computers and/or Internet in general and research on Classical Tamil literary studies with Computers and/or Internet in particular. Please send in your abstracts not later than 15th March 2011. We will try to expedite the acceptance of abstracts and papers as and when we receive them facilitating the international scholars to be able to obtain their visa and funding from their institutions on time.

The following is a collection of topics (non-exclusive) to be addressed at various technical sessions of the Conference.

- Tools for Classical Tamil literary research: Mining the corpus of Tamil literature, building search engines for the retrieval of Tamil literature texts from Sangam to Modern Tamil, research on identification of the chronology of Tamil authors and texts based on any computational analysis of Tamil literature texts.

- Tools for Tamil Computing:Word-processing (Text editor, Spell check, Grammar check, Dictionaries), plugins for browsers, online file convertors, etc.

- Open source software and Tamil Localization of software and OS.

- Standards for various applications and portable devices dealing with Tamil content.

- Tamil enabling in mobile and other hand-held platforms/technologies PDA, iPhone, androids, etc.

- NLP Applications in Tamil: Machine Translation, OCR, Voice recognition, speech synthesis, Search engines, Data mining of Tamil digital resources, etc.

- Tamil Internet: Blogging, Wikipedia, Podcasting, Data-mining of Tamil content in different font encodings, educational portals, Tamil online portals, aggregators, commercial solutions, etc.

- Tamil Content Databases for digital libraries and e-commerce.

Those who would like to make an oral presentation should submit a brief abstract at the conference gateway on or before 15th March 2011. Papers may be presented in English, Tamil or bilingual (Tamil-English) format.

As with the earlier conferences, all submissions must be in electronic form. For papers with content in Tamil or bilingual, please use Unicode encoding. Papers presented in any other encodings are liable for automatic rejection.

Conference Program Committee will review all submissions and select papers for presentation at various technical sessions. As in the past, extended abstracts (max 4 pages) of all accepted papers for the conference will be published in the Conference Book and also in electronic form in a CD/DVD.

Authors whose papers have been selected for presentation at the conference will be informed by 15th April 2011. Organizers of the conference assume that submission of a paper for possible presentation at TI2011 implies attendance at the conference and presentation in person by at least one author of the paper. Proxy presentation by third parties may be permitted at extreme circumstances, but the presenter needs to be familiar with the work and should be able to answer questions where possible.

One or two page abstracts of papers for presentation are to be sent to the INFITT conference secretariat's email ti2011@infitt.org with a copy to ti2011-cpc@infitt.org. Conference Program Committee will send a prompt confirmation of the receipt of the abstract.

For further details you can also contact any of the following country representatives

Malaysia: ElanTamil, Vice-Chair, INFITT: vice-chair@infitt.org , Elantamil@infitt.org
India: Anto Peter, Member Executive Committee, INFITT: antopeter@infitt.org
SriLanka: Mauran, Member Executive Committee, INFITT: mauran@infitt.org
Europe: SivaPillai, Member Executive Committee, INFITT: sivapillai@infitt.org
Australia: Mugunth, Member Executive Committee, INFITT : Mugunth@infitt.org
Singapore : Maniam, Executive Director, INFITT: ed@infitt.org, maniam@infitt.org
America : Va.Mu.Se. Kaviarasan, Chair, INFITT: chair@infitt.org, kavi@infitt.org

Other Regions: ed@infitt.org, chair@infitt.org

If you have any questions, please feel free to contact the conference secretariat at its email id ti2011@infitt.org.

URL for the TI 2011 conference website:
http://www.infitt.org/ti2011/
http://www.tamilinternetconference.org/

இணைப்பு - அ

தமிழ் இணையம் - 2011 நிகழ்ச்சிகள் குழு

1. முனைவர் கு. கல்யாணசுந்தரம்,சுவிட்சர்லாந்து - தலைவர்
2. பேராசிரியர் தெய்வசுந்தரம், இந்தியா
3. பேராசிரியர் ஏ.ஜி. இராமகிருஷ்ணன், இந்தியா
4. கணிஞர் மணி.மணிவண்ணன், இந்தியா
5. முனவைர் பத்ரி சேஷாத்திரி, இந்தியா
6. முனைவர் ழான் லூக் செவ்வியார், பிரான்சு
7. பேராசிரியர் இரா. செல்வகுமார், கனடா
8. முனைவர் சீதாலட்சுமி, சிங்கப்பூர்
9. திருவாளர் சிவா பிள்ளை, இங்கிலாந்து.

Annexure - A

TI 2011 Conference Program Committee:

1. Dr. K. Kalyanasundaram Switzerland – Chair
2. Prof. N. Deivasundaram, India
3. Prof. A.G. Ramakrishnan, India
4. Mr. Mani Manivannan , India
5. Dr. Badri Seshadri, India
6. Dr. Jean-Luc Chevillard, France
7. Prof. C.R. Selvakumar, Canada
8. Dr. Seetha Lakshmi, Singapore
9. Mr. Siva Pillai, United Kingdom

இணைப்பு - ஆ
தமிழ் இணையம் - 2011 உள்ளூர்க் குழு

1. முனைவர் வாசு அரங்கநாதன், பென்சில்வேனியாப் பல்கலைக்கழகம் - தலைவர்
2. முனைவர் ஹெறால்டு ஷிஃப்மென், பென்சில்வேனியாப் பல்கலைக்கழகம் - இணைத் தலைவர்.
3. முனைவர் சங்கரன் இராதாகிருஷ்ணன், டெக்சாஸ் பல்கலைக்கழகம், ஆஸ்டின்.
4. முனைவர் அரசு செல்லையா, மேரிலாந்து.
5. முனைவர் இராமச்சந்திரன் சிவகுமார், பென்சில்வேனியா.
6. முனைவர் முத்துமணி கருப்பையா, பென்சில்வேனியாப் பல்கலைக்கழகம்.
7. முனைவர் சொர்ணம் சங்கர், மேரிலாந்து.
8. முனைவர் சோமலே. சோமசுந்தரம், பென்சில்வேனியா.
9. திருவாளர் குமார் குமரப்பன், கலிஃபோர்னியா.
10. ஜோடி சாவேஸ், பென்சில்வேனியாப் பல்கலைக்கழகம்.

Annexure –B
TI 2011 – Local Organizing committee

1. Dr. Vasu Renganathan, University of Pennsylvania – Chair
2. Prof. Harold F. Schiffman ,University of Pennsylvania – Co-Chair
3. Dr. Sankaran Radhakrishnan,University of Texas, Austin
4. Dr. Arasu Chellaiah, Maryland
5. Dr. Ramachandran Sivakumar, Blue Bell, Pennsylvania
6. Dr. Muthumani Karuppiah,University of Pennsylvania
7. Dr. SornamSankar,Maryland
8. Dr. Somalay Somasundaram, Avondale, Pennsylvania
9. Mr. Kumar Kumarappan, California
10. Jody Chavez, University of Pennsylvania

இணைப்பு - இ
தமிழ் இணையம் - 2011 பன்னாட்டுக் குழு

1. கணிஞர் வா.மு.சே. கவிஅரசன், அமெரிக்கா - தலைவர்
2. கணிஞர் இளந்தமிழன் - மலேசியா
3. கணிஞர் ஆண்டோ பீட்டர் - இந்தியா
4. முனைவர் பொன்னவைக்கோ, இந்தியா
5. முனைவர் மோகன், செம்மொழி நிறுவனம், இந்தியா
6. முனைவர் அப்பாசாமி முருகையன், பிரான்சு

மற்ற உறுப்பினர்கள் பின்னர் அறிவிக்கப்படுவர்.

Annexure –C
TI 2011 – International Organizing committee

1. Mr. Va.Mu.Se. Kaviarasan, United States – Chair
2. Mr. ElanTamil – Malaysia
3. Mr. Anto Peter – India
4. Dr. Ponnavaikko – India
5. Dr. Mohan – CICT, India
6. Dr. Appasamy Murugaiyan, France

Other Members will be announced soon.

இணைப்பு - ஈ
தமிழ் இணையம் - 2011 கண்காட்சிக் குழு

1. திரு சு,மணியம், சிங்கப்பூர் - தலைவர்
2. திரு ஆனந்தன், இந்தியா
3. திரு இளங்கோவன், இந்தியா
4. திரு வள்ளி ஆனந்தன், இந்தியா
5. திரு கேபிரியல், இந்தியா
6. திரு இராம.சுகுந்தன், இந்தியா
7. திரு அனுராஜ், இலங்கை
8. திரு தில்லைக் குமரன், அமெரிக்கா

Annexure –D
TI 2011 – Exhibition committee

1. Mr. S.Maniam, Chair
2. Mr. N.Anandan , India
3. Mr. A.Elangovan , India
4. Mr. C.Valli Ananthan, India
5. Mr. N.Gabriel, India
6. Mr. Rama.Suganthan, India
7. Mr. Anuraj Siva, Sri Lanka
8. Mr. Thillai Kumaran, USA

இணைப்பு - உ
தமிழ் இணையம் - 2011 மாநாட்டு செயலகக் குழு

1. கணிஞர் இளந்தமிழன், மலேசியா - தலைவர்
2. கணிஞர் பாலசுந்தரராமன், இந்தியா - இணைத்தலைவர்
3. கணிஞர் முகுந்த்ராஜ், ஆசுதிரேலியா
4. கணிஞர் மயூரன், இலங்கை
5. கணிஞர் மாகிர், இந்தியா

Annexure –E
TI 2011 – Conference Secretariat committee

1. Mr. ElanTamil, Malaysia – Chair
2. Mr. Balasundararaman, India – Co-Chair
3. Mr. MugunthRaj, Australia
4. Mr. Mauran, SriLanka
5. Mr. Mahir, India

இணைப்பு - ஊ
தமிழ் இணையம் - 2011 மின்மஞ்சரி பதிப்புக் குழு

1. முனைவர் மகாலட்சுமி, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை. இணை ஆசிரியர் மின்மஞ்சரி
2. முனைவர் மாலா நேரு, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.
3. முனைவர் செந்தில்குமார், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.

Annexure –F
TI 2011 – Minmanjari Publication Committee

1. Dr. Mahalakshmi, Anna University, Chennai, India – Associate Editor
2. Dr. Mala Nehru, Anna University, Chennai, India
3. Dr. Sendhilkumar, Anna University, Chennai, India